செ.வெ.எண் : 54

நாள் : 14-1-2010

# பத்திரிகை செய்தி வெளியீடு

தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்படும் ஜவுளிகளுக்கு ஆண்டு முழுவதும் 20 விழுக்காடு தள்ளுபடி மான்யம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு செப்டம்பர் 2009 திங்கள் 15–ம் தேதி முதல் ஜனவரி 2010 திங்கள் முடிய 139 நாட்களுக்கு நடைமுறையில் உள்ள 20 விழுக்காடு அரசு தள்ளுபடியுடன் கூடுதலாக 10 விழுக்காடு சிறப்பு தள்ளுபடி சேர்த்து மொத்தமாக 30 விழுக்காடு அனுமதி அளித்து உத்தரவிட்டிருக்கிறது. இதன்படி பருத்தி ஜவுளி ரகங்களுக்கு 30% அல்லது ரூ.150/– இதில் எது குறைவோ அந்தத்தொகை தள்ளுபடியாகவும் பட்டு ரக ஜவுளிகளுக்கு 30% அல்லது ரூ.300 இதில் எது குறைவோ அந்தத்தொகை அரசு தள்ளுபடியாகவும் வழங்கப்பட்டு வருகிறது.

பட்டு சேலை விற்பனையை மேம்படுத்தும் வகையில் வருகிற பொங்கல் 2010 பண்டிகை மற்றும் முக்கிய திருமண மாதமான தை திங்களை முன்னிட்டு 12.01.2010 முதல் 31.01.2010 வரையிலான 20 நாட்களுக்கு மட்டும் பட்டு துணி வகைகளுக்கு உச்சவரம்பின்றி 10 விழுக்காடு சிறப்பு தள்ளுபடி வழங்கி விற்பனை செய்ய கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கும் மற்றும் பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும் சிறப்பாக அனுமதி அளித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதன் மூலம் பட்டு நெசவாளர் கூடடுறவு சங்கங்களில் பட்டு சேலைகள் விற்பனை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த அரிய வாய்ப்பை பொது மக்கள் பயன்படுத்தி பட்டு சேலைகள் வாங்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ரா.சக — 14/01/10
இயக்குநருக்காக.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9